குத்துச்சண்டை ரகசியம்

(The Secrets of Boxing)



உபாத்தியாயர்
இல்லாமல்
நான்கு நாளில்
குத்துச்
சண்டை
கற்றுக்
கொள்ளக்
கூடிய அரிய
விஷயங்களும்
அவற்றிற்குரிய
படங்களும்
இதில் அடங்கி
உள்ளன.

1934 [Price As. 2

குத்துச்சண்டை ரகசியம்

(*The Secrets of Boxing*)

சி. கணபதி முதலியார்

எழுதியது

ஸ்ரீ பண்டரி பிரஸ், 26, பிராட்வே,

சென்னை.

1934.

 [விலை அணா 2

இப்புத்தகத்தில் அடங்கியவை.

முகவுரை

உலகத்து மக்கட்கு இன்றியமையாது வேண்டற்பாலனவாய வித்தைகள் பல உளவேனும் அவ்வித்தைகளனைத்தையும் ஒவ்வொருவரும் தனித்தனிக் கற்றுணர்வதென்றால் கடவுள் குறித்த வாழ்நாள் போதுவதில்லை. மற்றவ்வித்தைகளுள் சிலவற்றைக் கற்கப்புகினும் அவற்றுள் பெரும்பாலனவற்றிற்குக் கற்கக்கூடிய எளிய முறைகள் ஏற்படுத்தப்படவில்லை. இவ்விருபதாவது நூற்றாண்டில் தோன்றிய சீர்திருத்தக்காரர்கள் பலர் சிற்சில வித்தைகளுக்கு மட்டும் வேண்டிய விளக்கம் செய்து சென்றனர். ஆனால் தற்காத்தல் பொருட்டு மக்கள் அறியவேண்டிய சண்டைக்கலை ஞானங்களை அறியுமாறு வேண்டிய பாடசாலைகளாவது தமிழ்ப் பாஷையில் எழுதிய தக்க நூல்களாவது இதுகாறும் வெளிப்படையில் உண்டாக்கப்படவில்லை. ஆதலால், இக்குறையை ஒருவாறு நீக்க எண்ணி என் சிற்றறிவிற்கேற்ப இச்சிறிய நூலை வெளியிடலானேன்.

எனினும், யான் இவ்வித்தையுணர்ச்சிக்கு அவசியமான முறைகள் அனைத்தையும் முற்றவெடுத்துக் கூறிவிட்டேன் என்று மொழியத் துணியேன். நீறுபூத்த நெருப்பேபோன்று வெளிக்குச் சாதாரண மனிதராயும் அந்தரங்கத்தில் இவ்வரியவித்தையில் மிக்க வல்லவராயும் இருக்கக் கூடியவர் பலர் உண்டு. அன்னார்க்கு இந்நூல் போதப்பயன் தாராதெனினும் இவ்வித்தை சிறிதும் முன் அறியாதார்க்கும் முறை தவறி அடித்துக்கொள்ளும் சிறுவர்களுக்கும் ஒரு

வழிக்காட்டாய் அமையுமென்பதே என் முக்கிய நோக்கம்.

இவ்வித்தையுணர்ச்சியால் வரும் பெரும்பயன் என்னவென ஆராயின் இஃது கற்பானுக்கு உள்ள கோழைத்தனம் பயம் முதலியவற்றை நீக்கி மக்களிடை இயற்கையாய்ப் பழக அவனுக்கு வீரமும் தீரமும் உண்டாக்குகின்றது. மேலும், தன்மேல் பகைகொண்ட ஒருவன் தன்னைத் தனித்த இடத்தில் பிடித்து அடித்துப்போடும் ஆபத்தினின்று காப்பதற்கும், தான் ஒருவனை அடித்து வெற்றிபெற நினைக்கின் அவன் தனக்குத் துணையாயும் இருந்து உதவுகிறது.

இவ்வரியபயன்களைத் தீயவழியில் உபயோகித்துக் கண்டவரை அநியாயமாய் அடித்துப்போடுவதென்று ஒருவன் துணிந்தால்அவன் இவ்வித்தைக்கே ஓரிழிவை உண்டாக்குகிறானல்லால் அரசாங்கத்தாராலும் தக்கபடி தண்டிக்கப்பட்டுக் கேடடைவானென்பது கூறாமலே விளங்கும். ஆதலால், இவ்வித்தையைக் கற்றுணர்ந்த ஒவ்வொருவரும் அங்ஙனம் இழிவைத் தேடிக்கொள்ளாமல் தத்தம் பெருமதிப்பைப் பாதுகாத்துப் புகழடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

கற்றோர்க்கன்றி மற்றோர்க்கும் விஷயம் லகுவில் விளங்கும்பொருட்டு இந்நூலை முன்னிலைமுகத்தான்; எளிய நடையில், நான்குநாள் பாடமாக வகுத்து எழுதியுள்ளேன்.

சென்னை
1-10-34

இங்ஙனம்:
சி. கணபதி முதலியார்.

முதல்நாள் பாடம்

சலாம் எடுக்கும் முறை

சலாமெடுத்தலென்றால் இவ்வித்தை தனக்கு விரைவில் வரும்பொருட்டு இதற்கு உரிய கடவுளாகிய **நாகூராண்டவனை** மனமாற வணங்குதலாகும். அஃதெப்படி வணங்குதலெனின் சர்க்கரைப் படையல் போட்டுத் தாம்பூலமும் பழமும் பரப்பிச் சில ஊதுவத்திகளைக் கொளுத்தி விட்டு, நீ அவற்றிற்கு எதிரே மேற்குமுகமாக உன்கால்களைப் பரப்பி நின்று, தலை குனிந்து கைகளைத் தரையிலும் நெற்றியிலும் மும்முறை தொட்டுத்தொட்டு வணங்கவேண்டும்.

இரண்டுவீடு கட்டுதல்

சலாமெடுத்தபிறகு, நீ ஒரு குறித்த இடத்தில் நின்று இரண்டு கைகளையும் முதுகு புறத்தில் கட்டி இடது காலை முன்னும், சுமார் ஒன்று அல்லது 1½-அடி இடம் விட்டு வலதுகாலை அதன் பின்னும் நிறுத்து. பின், உன் இடதுபாதம் நேர்முகமாகவும் வலதுபாதம் இடது பாதத்தைவிட 40 அல்லது 45 டிகிரி சாய்ந்தவிதமாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள். இந்நிலை **முதல்படத்தில்** காட்டப்பட்டிருக்கிறது. பிறகு, பின்னுக்கு நடந்துகொண்டு போ. போகும்போது உன் இடதுகால் பின்னாகவும் வலதுகால் முன்னாகவும், பின், வலதுகால் பின்னாகவும்



முதல் படம்

இடதுகால் முன்னுகவும் மாறும். இப்படி மாறும் போதெல்லாம் மாறிய கால்களுள் முன்னது நேர்முகமாகவும் பின்னது முற்கூறியபடி 40 அல்லது 45 டிகிரி சாய்ந்த வண்ணமாகவுமே இருக்கும்படி பார்த்துக்கொள். இதுபோன்று சுமார் 10 அடி பின்னுக்கு நடந்துகொண்டு போ. பின்னுக்குப் போகும்போது முக்கியமாய் நீ கவனிக்க வேண்டிய மற்றெருருவிஷயம் உண்டு. அதாவது நீ உன்பாதங்களைத் தூக்கித்தூக்கி வைக்காதே அவைகளைத் தரையில் தேய்த்தவண்ணமாகப் போ. பிறகு, முன்னுக்குவா. முன்னுக்கு வரும்போது பாதங்களை முன்போல் தேய்த்துக்கொண்டு வாராதே. முழங்கால்களை வேண்டிய அளவு மடக்கிப் பாதங்களைத் தூக்கித்தூக்கி வை. இப்படி முன்னுக்கு வரும்போதும் முன்னுல் வைக்கும் பாதத்திற்கும் பின்னுல் நிறுத்தும் பாதத்திற்கும் முன் சொன்னபடி சுமார் 40 அல்லது 45 டிகிரி சாய்வு இருத்தல் வேண்டும். இவற்றுடன் நீ முன்னுக்கு அடிவைக்கும் ஒவ்வொருதரமும் அலங்காரந் தோன்ற உன் தலையைச் சிறிது குனித்து நிமிர்த்திக்கொள். இப்படியே மீண்டும் மீண்டும் முன்னுக்கு ஏறியும் (முன்னுக்குச் சென்றும்) பின்னுக்கு இறங்கியும்(பின்னுக்குவந்தும்)பழகு. இதைத்தான் இரண்வேடு கட்டுதல் அல்லது ஏறுபார் என்பார்கள்.

மூன்றுவீடு கட்டுதல்

மேற்கூறியவண்ணம் இடதுகாலை முன்னும் ஒன்று அல்லது ஒன்றரை அடி இடம்விட்டு வலது காலை அதன்பின்னும் கொண்டுவந்து நிறுத்து. பின் இடதுபாதத்தை வலப்பக்கமாக ஓரடி தள்ளிவைத்து

வலதுபாதத்தை அவ்விடது பாதத்தின்முன் (சுமார் ஓரடி இடைவெளிவிட்டு) கொண்டுவந்து நிறுத்து. பின், வலதுபாதத்தை இடப்பக்கமாக ஓரடி தள்ளி வைத்து இடது பாதத்தை அவ்வலது பாதத்தின் முன் (சுமார் ஓரடி இடைவெளிவிட்டு) கொண்டுவந்து நிறுத்து. இவ்வண்ணமே கால்களை மாற்றிமாற்றி வைத்துக்கொண்டு முன்னுக்குப்போ. இதைத்தான் மூன்றுவீடு கட்டுதல் என்பார்கள்.


இவ்வீடுகட்டும் முறைகளை நன்றாய்ப் பழக்கத்திற்குக் கொர்ண்டுவந்தால்தான் உனக்குக் காலடிப் பழக்கம் ஏற்பட்டுப் பிறகு குத்தவேண்டி வரும்போதும் எதிரியின் குத்தைத் தடுக்கவேண்டி வரும்போதும் இக்கால்கள் விரைவில் முன்னும் பின்னும் பக்கங்களிலும் சென்று உதவும்.

———

இரண்டாம்நாள் பாடம்


கைகளைக் குத்தவும் கட்டவும் பழக்குதல்

மேற்கூறியபடி இடதுகாலை முன்னே நிறுத்தி வலதுகாலைப் பின்னே ஊன்றி, இரண்டு கைகளையும் முதுகுபுறத்தில் கட்டி, ஒரு குறித்த இடத்தில் நில்லு. பின், முன்னுக்கு அடிவைத்துக் கொண்டுபோ. போகும்போது முதுகின் புறத்துக் கட்டியிருந்த கைகளுள் வலது கையைப் பிரித்து உன் வலதுகாதின் பக்கத்தில் கொண்டுபோய் நிறுத்திப் பின் அக்கையை நேரே நீட்டிக் காற்றில்குத்து. (இதற்கு நேர்க்குத்தென்று பெயர்.) நீ இப்படி வலது கையால் குத்தும்போதே உன் வலது காலை முன்னுக்குத் தூக்கிவைத்துக்குத்து. அப்போதுதான் உன்குத்து முன்சென்று பகைவனைத் தாக்கும். இதன்பிறகு, உன் வலது கையைப் பழையபடி முதுகின் புறத்தில் கொண்டு வந்து நிறுத்திக்கொண்டு இடதுகாலை முன்வைத்து இடதுகையால் காற்றில் குத்து. குத்திமுடிந்த உடனே பழையபடி அக்கையை முதுகின்புறத்தில் கொண்டு வந்து நிறுத்திக்கொள். இவ்வாறு இரண்டு கைகளையும் மாற்றிமாற்றிக் குத்திக்கொண்டு சுமார் 10-அடி முன்னுக்கு எறு. பிறகு, 10-அடி பின்னுக்கு இறங்கு. இறங்கும்போது பின் சொல்லுகிறபடி வலதுகையாலும் இடதுகையாலும் கட்டுகிற பாவனையாய் இறங்கு. வலதுகையால் கட்டுவதென்றால் உன் வலதுகையால் குத்துப்பிடித்து அவ்வலது கையை உன் மார்பின் ஓரமாய்க் கொண்டுவந்து



இரண்டாம் படம்

உன் இடது கண்ணுக்கு நேரே சுமார் 1½-அடி தூரத்தில் நிறுத்து. இப்படிச்செய்வதைத்தான் வலது கையால் கட்டுவதென்று சொல்லப்படும். இடது கையால் கட்டுவதென்றால் இடது கையால் குத்துப் பிடித்து அவ்விடதுகையை உன் மார்பின் ஓரமாய்க் கொண்டுவந்து உன் வலது கண்ணுக்கு நேரே சுமார் 1½-அடி தூரத்தில் நிறுத்து. இதைத்தான் இடது கையால் கட்டுவதென்று சொல்லப்படும். நீ இறங்கி வரும்போது உன் கால்கள் முன்னும் பின்னுமாக மாறிமாறி நிற்குமல்லவா? அப்படி வலதுகால் முன்னாக நிற்கும்போது உன் வலது கையால் கட்டு, இடதுகால் முன்னாக நிற்கும்போது உன் இடது கையால் கட்டு. இவ்வாறு முன்னுக்கு ஏறும்போது கைகளைக் குத்தப்பழக்கு; பின்னுக்கு இறங்கும்போது கைகளைக் கட்டப்பழக்கு.




மூன்றும் படம்

மூன்றும் நாள் பாடம்

குத்தவும் குத்தைக் கட்டவும் பழகுதல்

விரைவில் காலடிவைக்கவும் குத்தவும் கட்டவும் பழகியபின் கைகளை முதுகின் புறத்துக் கட்டாதே. மார்பின்முன் கொண்டுவா. கொண்டுவந்த கைகளுள் இடதுகையை மேல்பாடத்தில் கட்டுவதற்குக் குறித்த வண்ணமும், வலதுகையை உன் மோவாய்க் கட்டைக்கு நேரே சுமார் $1\frac{1}{2}$-அடி தூரத்திலும் கொண்டுவந்து நிறுத்து. இதுதான் சண்டைக்கு முன் ஒவ்வொருவரும் நிற்கும் நிலை. இரண்டாம் படத்தைப் பார். இப்படம் இந்நிலையை ஒருவாறு காட்டுகிறது. இப்படி நிற்கும்போது உன் இடதுகை பெரும்பாலும் எதிரியின் குத்துக்களைத் தடுக்கவும் வலதுகை சமயம் வரும்போது எதிரியைக் குத்தவும் தயாராய் இருக்கவேண்டும்.

இனி, இதுகாறும் கூறிய விஷயங்களை நன்ருய் உணர்ந்த மற்றொருவரும் நீயும் ஒரு குறித்த இடத்தில் எதிர் எதிராய் நின்று உங்களுள் ஒருவர் குத்தவும் அவர் குத்துக்களை மற்றொருவர் கட்டவும் பழகுதல் வேண்டும். எதிரி வலதுகையால் குத்தினல் அக்குத்தை நீயுன் வலதுகையால் கட்டவேண்டும். மூன்றும் படத்தைப் பார். இவ்விஷயம் நன்கு விளங்கும். இப்படத்தில் **A** என்பவன் **B** என்பவனைத் தன் வலதுகையால் குத்துகிருன். **B** என்பவன் **A** என்பவனின் குத்தைத் தன் வலதுகையால் கட்டுகிருன். இதேபோன்று எதிரி தன் இடதுகையால்



நான்காம் படம்

குத்தினால் அக்குத்தை நீயுன் இடதுகையால் கட்ட வேண்டும். இவ்விஷயங்களை நீ வாசித்தவுடன் தெரிந்துகொள்வாயெனினும் உனக்கு விரைவில் குத்தவும் கட்டவும் கைப்பழக்கம் வருவதற்குப் பன்முறை பயிற்சி செய்தாலொழிய வாராதாதலால் (ஒரு குறித்த இடத்தில்) மற்றொருவரும் நீயும் எதிர் எதிராய் நின்றுகொண்டு முதலில் நீ அவரைக் குத்தவும் அப்போது அவர் உன் குத்துக்களைக் கட்டவும், பின், அவர் குத்தவும் அப்போது அவருடைய குத்துக்களை நீ கட்டவும் பழகவேண்டும். இப்படிப் பழகும்போது குத்துக்களைக் கட்டுகிறவர் கட்டிக்கொண்டே ஒவ்வோரடியாய்ப் பின்னுக்கு இறங்கிவர வேண்டும். குத்துகிறவர் குத்திக்கொண்டே ஒவ்வோரடியாய்க் கட்டுகிறவரைத் தொடர்ந்து முன்னுக்கு ஏறவேண்டும். இங்ஙனம் நீரிருவரும் பயிற்சி செய்யுந்தூரம் சுமார் 20-அடிக்குள் இருந்தால் போதும்.

நான்காம் நாள் பாடம்

(பலவித குத்துக்களும் அவற்றைக் கட்டும் விதமும்)

நேர்க்குத்து

சென்ற பாடத்தில் குறித்த குத்துக்கள்தான் நேர்க்குத்துக்கள் எனப்படும். அவற்றைக் கட்டும் விதமும் அங்குக் குறிக்கப்பட்டது.


வெட்டும் தட்டும்

இனி, அந்நேர்க்குத்துக்களைக் கட்டுகிற விதம் ஒருபுறமிருக்க அவற்றை வெட்டித் தட்டும் உபாயம் ஒன்று உண்டு. அஃதெப்படி எனில், எதிரி தன் வலது கையால் குத்தினுைபின், நீ யுன்னிடதுகையை அக்குத்துங் கையின்மேல் சடக்கெனக் கொண்டு வந்து வைத்து உன் முன்கை எலும்பினுல் அவன் குத்தை வெட்டிக் கீழே அமுக்கி அவன் மோவாய்க் கட்டையில் தட்டு. இப்படிச் செய்வதைத்தான் வெட்டித்தட்டுவே தென்பார்கள். நான்காம் படத்தைப் பார். இவ்விஷயம் நன்கு விளங்கும். இதில் **A** என்பவன் தன் இடதுகையால் குத்துகிறுன் அக் குத்தை **B** என்பவன் தன்வலதுகையால் வெட்டிப் பின் அக்கையினுலேயே **A** என்பவனின் மோவாய்க் கட்டையில் தட்டப்பார்க்கிறுன்.

பக்கக்குத்து

எதிரியின் வலதுகையாவது இடதுகையாவது முறையே தன் வலப்பக்கமாவது இடப்பக்கமாவது நேரே நீண்டு அசைந்து உன் இடதுகன்னத்திலாவது வலதுகன்னத்திலாவது வந்து தாக்கும். இவ்வித குத்துக்களைத்தான் பக்கக்குத்து அல்லது ஆடா குத்து என்பார்கள் இவற்றை மேல் நேர்க்குத்துக்களுக்குச் சொன்ன முறைப்படி தடுக்க முயன்றால் பயன்படாது. எதிரி தன் வலதுகையால் இவ்விதம் குத்தினால் நீயுன்னிடதுகையை உன் வயிற்றின் ஓரங் கொண்டுவந்து அக்குத்தை உட்புறம் தடுத்துத் தள்ளு. நான்காம் படத்தைப் பார். இதில் **B** என்பவன் **A** என்பவனைத் தன் வலதுகையால் குத்துகிறான். **A** என்பவன் அக்குத்தைத் தன்னிடதுகையால் உட்புறம் கட்டுகிறான் இப்படி எதிரியின் குத்தைத் தடுத்துவிட்டு அத்தடுத்த கையாலேயே எதிரியைக்குத்து இவ்வாறே எதிரியின் இடதுகைக் குத்தையும் உன் வலதுகையால் உட்புறம் கட்டி எதிரியைக் குத்து

ஒருவேளை, நீ எதிரியைப் பக்கக்குத்துக் குத்த வேண்டி நேர்ந்து அவன் உன் பக்கக்குத்தை மேற் கூறியபடி தடுத்துத்தள்ளி உன் வலதுகன்னத்திலேனும் இடதுகன்னத்திலேனும் குத்த வருவானாயின் அக்குத்துக்களையும் தப்பிக்கும் விதம் ஒன்றுண்டு. அவன் உன் வலதுகைக் குத்தைத் தன்னிடது கையால் தடுத்துத் தள்ளிப், பின், அக்கையாலேயே உன்வலது கன்னத்தில் குத்தவருகிறானென்று உனக்குத் தெரிந்தால், உடனே அவன்குத்தை உன்இடது கையால் வெட்டிவிட்டு இரண்டடி பின்னுக்கு வந்துநில். இப்படியே அவன் தன்வலது கையால் உன்னைக் குத்த நேரும்போதும் அக்குத்தை உன் வலதுகையால் வெட்டிவிட்டு இரண்டடி பின்னுக்கு வந்துநில்.




ஐந்தாம் படம்

கீழ்க்குத்து

எதிரியின் வலதுகையாவது இடதுகையாவது கீழ்த்தொங்குகிற நிலையினின்று அசைந்து உன் மோவாய்க்கட்டையை வந்து தாக்கும். இவ்வித குத்துக்களைத்தான் கீழ்க்குத்துக்கள் என்பார்கள். எதிரி தன் வலதுகையால் இவ்விதம் குத்தினால் உடனே நீயுன்னிடதுகையை அவனுடைய அவ்வலதுகையின் மேல் கொண்டுவந்து வைத்து அக்குத்தைக் கீழே அமுக்கு. இதேபோல் எதிரி தன்னிடதுகையால் குத்தினையின் நீயுன் வலதுகையை அவனுடைய அவ்விடதுகையின்மேல் கொண்டுவந்து வைத்து அக்குத்தைக் கீழே அமுக்கு.

இரட்டைக்குத்து

இரண்டு கைகளாலும் குத்துப்பிடித்து அவ்விரண்டுகைக் குத்தையும் ஒன்றுபட சேர்த்து உன் வலக்கன்னத்தண்டையேனும் இடக்கன்னத்தண்டையேனும் கொண்டுவந்து நிறுத்தி எதிரியின் முகத்தை நோக்கிக் குத்துவதற்கு இரட்டைக்குத்து என்று பெயர். இவ்விதம் எதிரி தன்னிரண்டு கைகளையும் சேர்த்து இரட்டைக்குத்துக் குத்தினையின் அக்குத்தை ஒரு கையால் கட்ட இயலாது. ஆதலால், உன்னிரண்டு கைகளையும் கத்தரி அல்லது சிலுவை வடிவாக உன்முகத்துக்கு நேரே கொண்டுவந்து நிறுத்தி அக்குத்தைக் கட்டவேண்டும். அல்லது, இவ்விரட்டைக்குத்துப் பிடித்துக் குத்தவரும் எதிரியின் முழங்கைகளுக்கிடையில் இருக்கும் இடைவெளியில் உன்னிரண்டு கைகளையும் சடக்கெனக் கொண்டுவந்து நுழைத்து அவன் இரட்டைக்குத்தைக் கலைத்து



ஆறும் படம்

விட்டு, அவ்வேகத்திலேயே நீ எதிரியை இரட்டைக் குத்துக் குத்து.

பதுங்கிக் குத்தல்

மூன்றும்நாள் பாடத்தில் சொல்லியவண்ணம் எதிரி தன்வலதுகையால் நேர்க்குத்துக் குத்தினால் அக் குத்தை நீயுன் வலதுகையால் கட்டுவாயல்லவா? இரண்டொரு குத்துக்களை அப்படிக் கட்டிக் காட்டிப் பிறகு, அக்குத்தைக் கட்டிய வேகதிலேயே திடீ ரென்று மூன்றுவீடு கட்டிப் பதுங்கி, எதிரியின் வலது புஜத்தண்டை நெருங்கி, உன்னிடது கையால் அவன் கழுத்தில் சடக்கெனக் குத்து இவ்விஷயம் ஐந்தாம் படத்தைப் பார்த்தால் நன்கு விளங்கும். இப்படத் தில் **A** என்பவன் **B** என்பவனைத் தன் வலதுகையால் குத்துகிறான். **B** என்பவன் **A** என்பவனின் குத் தைக் கட்டியவண்ணமாகப் பதுங்கி அவன் புஜத் தண்டை நெருங்கித் தன்னிடதுகையால் அவனைக் கழுத்தில் குத்துகிறான். இவ்வித சந்தர்ப்பத்தில் எதிரி நேர்முகமாக நிற்கவில்லை யாதலால் அவனைப் பல குத்துக்கள் குத்தினாலும் அவன் அக்குத்துக் களைக் கட்ட இயலாது சிறிதுநேரம் திகைப்பான். இதேபோன்று எதிரியின் இடதுகைக் குத்தைக் கட் டிக்கொண்டு அவன் இடதுபுஜத்தண்டை நெருங்கி உன் வலதுகையால் அவனைக்குத்து.

குத்தைக் காலிசெய்தல்

எதிரி பக்கக்குத்துக்கள் குத்தினால் அவற்றைக் கட்டும்விதம் ஒருபுறமிருக்க காலிசெய்துவிடுந் தந்திரம்

ஒன்றுண்டு. அவன் குத்தும்போது உன் தலையைச் சடக்கெனக்கீழ் இழுத்துக்கொண்டால் அவன் குத்து உன் தலைக்குமேல் போய்விடும். அதுவுமன்றி தான் குறித்த இடத்தில் தன் குத்துச் சென்று படாமல் போனதால் எதிரி தன் குத்தின் வேகத்துடனே சென்று தத்திக்கொண்டு விழுவான். இதைத்தான் குத்துக்காலிசெய்தல் என்பார்கள். ஒருவேளை எதிரி மிகப் பலமானவனாக இருப்பின், தான் கீழ் விழாமல் சிறிது சுழன்றுகொண்டு நிற்பான். அதற்குள் நீ நிமிர்ந்து அவனைக் குத்தவேண்டும் இவ்வித சந்தர்ப்பத்திலும் எதிரி நீ குத்தும் குத்துக்களை உடனே கட்ட இயலாது. ஆறும்படத்தைப் பார். இப்படத்தில் **B** என்பவனின் வலக்கைக்குத்தை **A** என்பவன் காலிசெய்து அவனைத் தன்னிடதுகையால் குத்துகிறான்.

சில முக்கிய விஷயங்கள்

1. வித்தையுணர்ச்சி மிகுதியிருந்தும் உடல் வன்மை யில்லையாயின் எதிரியைப் பெரும்பாலும் வெல்வது கூடாததலால் முதன் முதலாக உன் உடல் வன்மையடையும்பொருட்டுத் தகுந்த தேகாப்பியாசம் செய்து சாரமான உணவருந்தல் வேண்டும்.

2. எதிரிக்கு நேராய் நிற்கும்போது இடது பாதம் தரையில் படிந்தவண்ணமும், வலது குதிக் கால் தரைக்குமேல் ஓரங்குலம் தூக்கிய வண்ணமும், இரண்டு முழங்கால்களும் சிறிது வளைந்த வண்ணமு மாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் உன் கால்கள் திடீரென்று அப்படி இப்படித் தள்ளிப் போகத் தயாராயிருக்கும்.

3. பகைவனுக்கு முன் நிற்கும்போது இடது புஜத்தை முன் நீட்டி இடதுகையை மேலுங்கீழும் அசைத்தவண்ணமாயும் வலது கையை முகத்துக்கு நேராய்க் கொண்டுவந்து வலப்பக்கமும் இடப்பக்கமும் அசைத்தவண்ணமாயும் இரு. இப்படிச் செய்வது உன் கைந்நரம்புகளையும் வலிமையையும் தூண்டுவ தல்லால் பகைவன் திடீரென்று உன்மேல் பாய்ந்து குத்தாமல் இருக்க அவனுக்கு அச்சமும் உண்டாக்கு கிறது.

4. சண்டை செய்யும்போது எக்காரணம் பற்றி யும் கண்களை மூடுவதும், குத்துப் பிடிப்பதை விட்டு விரல்களைத் தளரவிடுவதும், பகைவனுக்கு முதுகு காட்டி நிற்பதும், பகைவன் கீழே விழுந்து விட்டால் குத்துவதும் செய்யாதே.

5. குத்துப் பிடிப்பதென்றால் கட்டைவிரல் நீங்கிய மற்றைவிரல் நான்கையும் மடக்கி, மடக்கிய

விரல்களின் மேல் கட்டை விரலைக் கொண்டுவந்து நிறுத்திக் குத்துப்பிடி.

6. சந்தர்ப்பம் வாய்த்தால் எதிரியின்கால் பெருவிரலை உன் இடது பாதத்தால் இறுக மெதித்து அழுத்திக்கொண்டு அவனைக்குத்தினால் அவன் பின் செல்ல வழியின்றி உன் குத்துக்குத் தவறாது இலக்காவான்.

7. எதிரியை இரண்டொரு குத்துக்கள் குத்தி விட்டு அதேமூச்சில் அவனை மேலும் மேலும் குத்த நினைக்காதே. உடனே உடானடித்து (இரண்டு மூன் றடி ஒரே குதியாய்க் குதித்துக்குதித்துப் பின்னுக் கேனும் முன்னுக்கேனும் போவது) பின்னுக்கு இறங்கிவிடு. ஏனெனில், நீ குத்தியவுடன் அடக்கி யிருந்த உன் மூச்சுக் குறைவுபடும். அப்போது எதிரி பக்கங்களில் ஒருவேளை மாறி குத்தினானாயின் அவன் குத்தைக் கட்டவும் மறுகுத்துக் குத்தவும் இயலாமல் போகும்.

8. சண்டை செய்யும்போது மனதில் வேறொன் றை நினைத்துக் கொண்டாவது பயந்து கொண்டாவது சண்டைசெய்யாதே.

9. பகைவனை வலதுகையால் குத்துவதுபோல் வலக்கைப் போக்குக் காட்டிச் சடக்கென இடது கையால் குத்துவதும், இடதுகையால் குத்துவது போல் இடக்கைப் போக்குக் காட்டிச் சடக்கென வலதுகையால் குத்துவதுமாகிய தந்திரத்தைச் சண்டையினிடையில் கையாண்டால் பகைவனைச் சுலபமாய் வெல்லலாம்.

இப்புத்தகம் கிடைக்கும் இடம்

(1) தாசன் புத்தகக் களஞ்சியம்
146, மூர்மார்கட்,
சென்னை.

(2) C. S. சண்முக முதலியார்
2/34, நயினியப்பநாய்க்கன் தெருவு,
(கந்தசாமிகோவில் அருகில்)
சென்னை.

(3) ஸ்ரீ பண்டரி பிரஸ்
26, பிராட்வே,
சென்னை.

(4) முருகேச முதலியார்
(வெற்றிலைபாக்குக்கடை)
12, ஜாண்டரபிள்ளையார் கோவில் தெருவு,
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை.

(5) பத்திரிகை விற்கும் இடங்கள்.